# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 11 ஜீன் - 1998 இதழ் - 6




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. பெந்தெகொஸ்தே நாளின் சிறப்புகள் 1
2. கர்த்தருடைய சபையை அடையாளம் காண்பது எப்படி 6
3. உண்மையைத் தேடி 11
4. பரலோகத்திற்கு பல வழிகள் உண்டா? 15
5. சாந்தம் 18
6. செவித்தினவு 21
7. மன உந்துதல் 25
8. தேவனுடைய ஜனங்கள் 29
9. மனம் திரும்புதல் 32

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 11 JUNE-1998 Issue - 6


ஆசிரியவுரை

## பெந்தெகோஸ்தே நாளின் சிறப்புகள்

கீழ்ப்படியாமை என்பது, மிக வேகமாக வளர்ந்து வரும் ஒரு சமூகத் தீமை. இத்தீமை குடும்பங்கள், கல்வி நிலையங்கள், தொழிற்கூடங்கள் இப்படி இன்னும் பல அமைப்புகளின் சமாதானத்தை அழித்து, தரத்தைக் குறைத்து, செயல்திறனைப் பாதித்து ஒரு மோசமான நிலைக்கு இழுத்துச் செல்கிறது. இதன் கோரப்பிடியில் சிக்காமல் இருக்கின்ற ஒரு அமைப்பைக் காண்பது மிகவும் கடினம். இப்பெருந்தீமை, எப்படி ஜென்மீக வாழ்க்கையைப் பாதித்துப் பிரச்சினைகளை உண்டாக்குகிறதோ, அதைப் போலவே ஆன்மீக வாழ்க்கையிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. சொல்லப் போனால், கீழ்ப்படியாமையின் மூலம் ஏற்படும் நஷ்டம் ஆன்மீக காரியங்களில் தான் அதிகம். ஆம், செப்பனிட முடியாத விளைவுகளை ஏற்படுத்துகிறது.

இப்பூவுலகில், தான் வாழ்ந்த நாட்களில் மட்டுமல்ல, கொடூரமான சிலுவை மரணம் தன்னை எதிர்நோக்கியிருந்த வேளையிலும், தன்னை பிதாவின் சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படுத்திய, தேவ மைந்தனின் சீடர்கள் என்று தங்களைப் பெருமையோடும், உரிமையோடும் அழைத்துக் கொள்ளும் கிறிஸ்தவர்களும் இத்தீமைக்கு விதிவிலக்கானவர்களல்ல. கீழ்ப்படியாமை என்பது, கட்டளைகளை ஏற்றுக் கொள்ளாமல், பின்பற்றாமல் இருப்பதாகும். செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் இருப்பதும், செய்யக் கூடாதவைகளைச் செய்வதும் கீழ்ப்படியாமையே.

இன்றைக்குக் கிறிஸ்தவச் சமுதாயம் பண்டிகைகள் என்ற பெயரில் சில நாட்களைத் தெரிந்து கொண்டு, அந்த நாட்களுக்குப் பல சிறப்புகளை தானமாக அள்ளிக் கொடுக்கின்றனர். கிறிஸ்து பிறந்த நாள், சாம்பல் புதன், பெரிய வெள்ளி,

ஈஸ்டர் திருநாள், தேவமாதா பிறந்த நாள், கர்த்தர் ரூப மாறிய நாள் என்று இப்படி அநேக காட்சிகளைக் குறித்து வேதாகமம் எங்கே போதிக்கிறது? ஆர்வ மிகுதியினால் ஏற்படும் தீமைகள் இவை. சொல்லப்படாத காட்சிகளைத் தெரிந்து கொண்டு, அவைகளுக்கு அவசியமே இல்லாத சிறப்புகளைக் கொடுத்து, தாங்கள் செய்வதோடு மட்டுமல்லாமல் தங்கள் பிள்ளைகளுக்கும் அவைகளைப் போதித்து, வளருகின்ற அந்தப் பிஞ்சு உள்ளங்களில் தேவனுடைய வார்த்தையிலிருந்து விலகிச் செல்லுதல் என்ற நஞ்சை ஊட்டி விடுகின்றோம். வேதாகமம், குறிப்பாகப் புதிய பிரமாணம் இந்நாட்களைக் குறித்தெல்லாம் மௌனம் சாதிக்கிறதே ஏன் என்று நாம் சிந்திப்பதேயில்லை. ஆதி 8 : 4 ல் "ஏழாம் மாதம் பதினேழாம் தேதியிலே, பேழை அரராத் என்னும் மலைகளின் மேல் தங்கிற்று" என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவின் பிறப்புக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த் ஒரு சம்பவத்தையே மாதத்தோடும், நாளோடும் துல்லியமாகச் சொல்லும் வேதாகமம், கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றியும், நாம் கொண்டாடுகின்ற ஏனைய நாட்களைக் குறித்தும் ஒன்றும் சொல்லுவதில்லையே ஏன் என்று சிந்தித்ததுண்டா? நாம் ஏன் சிந்தனைக்குத் தீனி போட மறுக்கிறோம்?

சரி, கட்டளையிடப்படாத நாட்களைத் தெரிந்து கொண்டு அவைகளுக்குள்ள சிறப்புக்களையும் துல்லியமாக அறிந்து வைத்திருக்கிற கிறிஸ்தவச் சமுதாயம், கிறிஸ்தவம் என்கின்ற அந்த அழகிய மாளிகைக்கு அஸ்திபாரமாகத் திகழும் பெந்தேகொஸ்தே நாளைக் குறித்து எந்த அளவுக்கு அறிந்திருக்கிறது? இந்த நாள் ஒரு முக்கியமான நாள் என்று எத்தனை கிறிஸ்தவர்களுக்குத் தெரியும்? இந்த நாளில் நடந்தவற்றைக் குறித்து தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கின்ற பெற்றோர்கள் எவ்வளவு பேர் இருப்போம்? இந்த நாளைக் குறித்தும், அதன் சிறப்புக்களைக் குறித்தும் வேதாகமம் என்ன போதிக்கிறது என்று ஆராய்வோமா?

இந்த நாளின் சிறப்புக்களைப் பார்க்குமுன், இந்த நாளின் பின்னணியைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

பெந்தெகொஸ்தே நாள் என்பது இஸ்ரவேலருடைய சரித்திரத்தில் ஒரு முக்கியமான நாள். இஸ்ரவேலரின் பிரதான பண்டிகையாகிய பஸ்கா கொண்டாட்டங்களுக்குப் பின்வரும் ஐம்பதாவது நாள். இதைப் பற்றி லேவி 23 : 15 –21 வசனங்களில் நாம் காணலாம். அந்த நாளில் காலை 9 மணிக்கு (அவர்களுக்கு மூன்றாம் மணி வேளை) இஸ்ரவேலர் கூட்டமாகக் கூடி, கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த அறுவடையின் முதற்பலன்களை, கர்த்தருக்குக் காணிக்கையாகச் செலுத்திக் கொண்டாடுவார்கள். அது மாத்திரமல்ல, அந்நாளில் பெருந்திரளான மக்கள் கூடுவார்கள். உலகெங்கிலும் உள்ள ஜனங்கள் எப்படியாவது பஸ்கா பண்டிகைக்கு எருசலேமில் இருக்கவேண்டுமென விரும்பி வந்து, தொடர்ந்து பெந்தெகொஸ்தே நாள் வரையிலும் எருசலேமில் தங்கியிருப்பார்கள். அப். 2 : 5 வசனத்தில், "வானத்தின்

கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமில் வாசம் பண்ணினார்கள்" எனக் காண்கிறோம். கீழ்வரும் வசனங்களில் 17 நாட்டு மக்கள் கூடிவந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.

இப்பொழுது அந்த நாளின் சிறப்புகளுக்கு நாம் வருவோம். இம்மகத்தான நாள் இடம் பெற்றிருக்கும் புத்தகம் புதிய ஏற்பாட்டின் ஐந்தாம் புத்தகமான அப்போஸ்தலருடைய நடபடிகள். சபைச் சரித்திரத்தைப் பற்றி, இப் பூமியில் எழுதப்பட்ட முதல் புத்தகம் இதுதான். **"நான்கு நற்செய்தி நூல்களும் கிறிஸ்துவானவர் இப்பூமியில் இருந்தபொழுது என்னவெல்லாம் செய்தார் என்பதை விளக்கும் பொழுது, அந்தக் கிறிஸ்துவானவர் பரமேறிய பின் என்ன செய்தார் என்பதைப் படம்பிடித்துப் காட்டுகிறது இப்புத்தகம்".**

இந்த அப்போஸ்தலருடைய நடபடிகளில் "முதன் முதலாக" நடந்தவைகள் என்று குறைந்தது 13 சம்பவங்கள் உண்டு. இவைகளில், முதல் 5, அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள **பெந்தேகொஸ்தே நாளில்** நிறைவேறியுள்ளது என்பதை நாம் கவனிப்பது அவசியம்.

**1.** நமதாண்டவரால் வாக்குத்தத்தமாக அப்போஸ்தலர்களுக்குச் சொல்லப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் வருகை பெந்தெகொஸ்தே நாளில் நடந்துள்ளது. "ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" (அப். 2 : 5). கிறிஸ்துவானவர், யோவான் 16 : 13ல் "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்றார். அந்த வாக்கு மாறாதவர் வாக்களித்ததைப் போலவே, பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தும்படியாக, பெந்தெகோஸ்தே நாளில் வந்தார். அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கத் தொடங்கினார்கள்.

**2.** சபை தோற்றுவிக்கப்பட்ட மகிழ்ச்சிக்குரிய சம்பவம் பெந்தெகோஸ்தே நாளில் தான் நடந்தது. பழைய ஏற்பாட்டின் காலங்களில் விதையாக மறைந்திருந்தது, பெரும் விருட்சமாக மாறி அநேகர் காணும்படியாக அந்நாளில் காட்சி தந்தது. பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக ஆயத்தமாகிக் கொண்டிருந்த சபையானது, அந்த நாளில் முழுமையான ஒன்றாக நின்றது. பழைய ஏற்பாட்டின் காலத்திலும் சபையானது இருந்தது, ஆனால் தேவனுடைய திட்டத்தில், அவருடைய எண்ணத்தில் இருந்தது. அது வாக்குத்தத்தமாக இருந்தது. கிறிஸ்து வருவார், சபையை ஸ்தாபிப்பார் என்று தீர்க்கதரிசிகளாலே முன்னறிவிக்கப்பட்டிருந்தது. அவை அனைத்தின் நிறைவேறுதலாக, பெந்தெகோஸ்தே நாளில், சபையானது உருவெடுத்துக் காட்சி தந்து, அநேகரை பிரமிக்கச் செய்தது.

3. உலகச் சரித்திரத்திலேயே, முதன் முதலாகச் சுவிசேஷப் பிரசங்கம் இந்தப் பெந்தெகோஸ்தே நாளில் தான் பிரசங்கிக்கப்பட்டது. சுவிசேஷமாகிய நற்செய்தி என்பது இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் என்பவைகளாகும். நாம் ஒவ்வொருவரும் மெய்க் கிறிஸ்தவர்களாக மாற இந்த நற்செய்தியைத் தான் விசுவாசிக்க வேண்டும். "ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று, உலக வரலாற்றில், முதன் முதலாகச் சொல்லப்பட்டதும் இந்த பெந்தெகொஸ்தே நாளில் தான் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

4. முதன்முதலாக இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதும் இந்த பெந்தெகொஸ்தே நாளில் தான். பழைய ஏற்பாட்டின் காலத்தில் ஞானஸ்நானம் இல்லை. ஞான ஸ்நானம் என்ற வார்த்தையே பழைய ஏற்பாட்டில் இல்லை. இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தபொழுது, "எல்லோரும் மோசேக்குள்ளாக, மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது (1 கொரி. 10:2). யோவான் ஸ்நானகன் ஊழியம் செய்த நாட்களில்தான் ஞானஸ்நானம் முதலாவதாகப் பிரசங்கிக்கப்பட்டது. யோவான், யாருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தார் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் என்பது பெந்தெகொஸ்தே நாளில் தான் துவங்கிற்று. இந்த ஞானஸ்நானமும் மத் 28 : 19-ல் சொல்லப்படும் ஞானஸ்நானமும் ஒன்றே.

5. இறுதியாக புதிய ஏற்பாட்டின் முதலாவது ஆராதனை பெந்தெகொஸ்தே நாளில் தான் நடந்தது. இன்று நாமெல்லாரும் தேவனை ஆராதிக்கிறோம். ஆராதிப்பதன் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் மனச் சமாதானம் ஏராளம். இச்சிலாக்கியத்தை நமக்கு ஆரம்பித்துக் கொடுத்தது, அந்த பெந்தெகோஸ்தே நாளல்லவா! **"அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்"** (அப். 2:42)

சரி, இந்த மகத்தான, ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டிய நாளின் சிறப்புகளைக் கண்ட நாம், அந்நாளின் சிறப்புகளுக்கு பெருமையைச் சேர்த்த பேதுருவை மறக்கலாமா?

பேதுரு இயேசுக் கிறிஸ்துவின் அப்போஸ்தலன். மீன் பிடிக்கும் தொழில் செய்து வந்தான். அதிகம் கல்லாதவன். வெளிப்படையாக பேசும் இயல்பு இவனுக்குச் சொந்தம். இப்பூமியில் வாழ்ந்து மரித்த மிகச் சிறந்த மனிதர்களில் இவனும் ஒருவன்.

பேதுரு ஒரு தலைசிறந்த பிரசங்கி, அப் 2ம் அதிகாரத்தில் பெந்தேகோஸ்தே நாளில் இவன் செய்த பிரசங்கத்தைப் போல, கேட்போரின் இருதயத்தைக் கரைத்த ஒரு செய்தியை வேதாகமம் எங்கும் தேடினும் நாம் காண்பது அரிது. அவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் சம்மட்டி

அடிகளைப் போல இருதயத்தை நொறுக்கிற்று, காரணம் அவன் பிரசங்கம், இன்று அநேகர் செய்வதைப்போல சுயவிளம்பரப் பிரசங்கம் அல்ல. ஜனங்களுடைய பணப்பைகளில் அவன் வலை விரிக்கவில்லை. அவன், சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவையும், அவருடைய உயிர்த்தெழுதலையும் குறித்தே பேசினான். கூடியிருந்த மக்கள் 50 நாட்களுக்கு முன் செய்த கொடுமையை கொஞ்சமும் தயக்கமின்றி வெளிப்படுத்தினான். ஆனால் "நீங்கள் சிலுவையிலறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துமாக்கினார் என்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள்" என்றான் (அப் 2 :36) சிலுவை மரணம் நடந்தேறிய அதே எருசலேம் பட்டணம். இயேசுவைக் கொலைக்கு ஒப்புக் கொடுத்த அதே மக்கள் கூட்டம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து நிச்சயமாய் அறிந்திருந்த ஜனங்கள். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு அவர்களுக்குப் போக்குச் சொல்லவே இடமில்லை. அவர்களின் இருதயம் குத்தப்பட்டது. இந்த இடம்தான் காட்சியின் உச்சக்கட்டம் இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் கேட்க வேண்டிய ஒரு அர்த்தமுள்ள கேள்வியைக் கேட்டார்கள். "சகோதரரே! நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்பதே அந்தக் கேள்வி. பேதுருவின் பதில் என்ன தெரியுமா? நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்பதே (அப். 2 : 38).

இதை வாசிக்கும் அருமையான நண்பரே! பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்த மக்கள் கேட்ட கேள்வியை உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் கேட்டதுண்டா? உங்கள் பதில் ஆம் என்றால் பேதுரு, சொன்னதைப் போல் நீங்கள் உண்மையாகவே செய்துள்ளீர்களா? பேதுரு சொன்னதிற்கு மாறாக, கொஞ்சம் வித்தியாசமாக நீங்கள் செய்திருப்பீர்களானால் கூட அதில் பயன் ஏதுமில்லை. நீங்கள் மறுபடியும் அந்தக் கேள்வியைக்கேட்க வேண்டியவர்களாகவே உள்ளீர்கள்!

உங்கள் பதில் இல்லையென்றால், ஏன் தாமதம்? இரட்சிப்பு உங்களுக்கு வேண்டாமா? கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகள் உங்கள் இருதயத்தைத் தொடவில்லையா? உயிர்த்தெழுதலைக் குறித்து இன்னும் உங்களுக்கு குழப்பம் உள்ளதா? அல்லது உங்களுடைய கேள்வி, சந்தேகம் எதுவாக இருந்தாலும், வேதவாக்கியங்களின் அடிப்படையில் அதில் சிறிதும் நியாயமில்லை. அந்த பெந்தேகொஸ்தே நாளில் கூடியிருந்த மக்கள் கேட்ட அதே கேள்வியை நீங்களும் கேட்க வேண்டுமென உங்களை ஊக்கப்படுத்துகிறோம், கர்த்தர் உங்களோடிருந்து வழிநடத்துவாராக!

**S. ராஜநாயகம்.**

# கர்த்தருடைய சபையை அடையாளம் காண்பது எப்படி?

நாம் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி என்ற தலைப்பின் கீழாக பாடங்களைப் படித்துக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவின் சபை கூடி வருகின்ற இடத்தில் நீங்கள் இருந்தால் அது மிகவும் நல்லது. ஆனால், கிறிஸ்துவின் சபை இல்லாத இடத்தில் நீங்கள் இருக்க நேர்ந்தால், அங்கே சபை இருக்க வேண்டியது அவசியம். ஒரு வேளை சபை இல்லாத இடத்திற்கு நீங்கள் குடிபெயர்ந்து போக நேரும்போது, அங்கு சபை இருக்க வேண்டியது அவசியம். அதை ஆரம்பிப்பது நீங்கலாக இருக்கலாம். இதைச் செய்வதற்கு நம்மை வழிநடத்தக்கூடிய பல காரியங்களை எங்களோடு சேர்ந்து படியுங்கள்.

நமது முயற்சிக்கு உதவியாக நாம் இப்போது "கர்த்தருடைய சபையை அடையாளம் காண்பது எப்படி?" என்று பார்ப்போம்.

முதலாவது, வேதாகமத்திலிருந்து, சபையைக் குறித்து, நாம் ஒவ்வொருவரும் வாசித்தறிந்து கொள்ளமுடியுமென்பதை திட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைநாம் அடையாளம் கண்டுகொள்ளவும் முடியும். எல்லா மார்க்க கூட்டங்களிலிருந்தும் அதை வேறுபடுத்திக் காட்டக்கூடிய சில அடையாளங்கள் அங்கே உள்ளது. உதாரணமாக, நீங்கள் ஏதாவது ஒரு சபையில் அங்கமாக இருந்தால் அல்லது உங்களைச் சுற்றிலுமிருக்கும் சபையை நீங்கள் கவனித்தால், வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சபையின் அடையாளங்களோடு, நீங்கள் சென்று கொண்டிருக்கும் சபை அல்லது, மற்ற சபைகளோடு அவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், அது உண்மையாகவே கிறிஸ்துவின் சபையா அல்லது போலியானதா என்பதைக் கண்டுகொள்ளலாம்.

ஒரு சபையில் அங்கமாக இருப்பது, என்ன வேறுபாட்டை ஏற்படுத்தப்போகிறதென்பதை அறிந்துகொள்ள நீங்கள் விரும்பலாம். சபை முக்கியமானதல்லவென்றும், சபை ஒருவனை இரட்சிக்காது என்றும், எந்த சபையிலும் அங்கமாக இல்லாமலே ஒருவன் பரலோகம் செல்ல முடியுமென்றும் நீங்கள் வாதிடலாம். இந்த வாதம் கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. உண்மையில் இது ஒரு சத்தற்ற வாதம். சபையானது முக்கியமற்றதாக இருக்குமானால்,

அல்லது எல்லா சபைகளும் ஒன்று என்றால், பின் எதற்காக கர்த்தர் தன் உயிரையே ஒரு சபைக்காகக் கொடுத்து, தன்னுடைய சபையை இந்தப் பூமியில் கட்டினார். சபை ஒருவனை இரட்சிக்காது என்பது உண்மை. ஏனெனில் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம்தான் சபையாகும். ஆனால் கிறிஸ்து இரட்சகராக இருக்கிறபடியால், ஒருவன் இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்வதற்கு, அவர் இரட்சகராக உள்ள சபையில் அங்கமாக இருக்க வேண்டியது அவசியம்.

இக்காரியத்தை இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ள, வேதாகமத்திற்குச் சென்று சபையின் அடையாளங்களை அறிந்து கொள்வோம். வெகுகாலத்துக்கு முன்பே, தேவனுடைய தீர்க்கதரிசிகள், கர்த்தர் தமது ராஜ்ஜியம் அல்லது சபையை ஸ்தாபிக்கும் நாளைக் குறித்துப் பேசியுள்ளனர். ஏசாயா தீர்க்கதரிசி இப்படிக் கூறியுள்ளார். ``திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை." (ஏசா 2 : 2, 3) யோவேல் தீர்க்கதரிசி இந்தவிதமாக எழுதியுள்ளார். "அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள், குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்வார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்" (யோவேல் 2 : 28, 29) தொடர்ந்து தானியேலும் இப்படி சொல்லியுள்ளார். `` அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" (தானி 2 : 44) தேவனுடைய இந்த தீர்க்கதரிசிகளெல்லாம் என்ன சொல்கிறார்கள்? அவர்களனைவரும் ஏகோபித்த குரலில், கர்த்தருடைய ஆவிக்குரிய ராஜ்ஜியமாகிய சபை தோற்றுவிக்கப்படும் என்று சொல்லியுள்ளனர். இது

எருசலேமிலே ஸ்தாபிக்கப்படுமென்றும், அங்கிருந்து கர்த்தருடைய வசனம் உலகெங்கும் போகுமென்றும் உள்ளது. இது ஆவியின் பலத்தோடு வருமென்றும், இது ஒருபோதும் அழியாததென்றும் என்றென்றைக்கும் நிலைத்திருக்குமென்றும் சொல்லப்பட்டுள்ளதை நாம் காணலாம்..

இவைகள் அனைத்தும் கனகச்சிதமாக நிறைவேறியுள்ளது. எருசலேம் பட்டணத்தில், அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி சபையாக தோற்றுவிக்கப்பட்டு, நற்செய்தியானது உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டது. அந்த நாளிலே தானே சபையானது கட்டப்பட்டது. அந்நாள் முதல் சபையானது இருந்து கொண்டுள்ளது. கிறிஸ்துவின் வருகை மட்டும் அது நிலைத்திருக்கும்.

இயேசு தமது சபையைக் கட்டுவேனென்று சொன்னார். (மத் 16 : 18) அப்போஸ்தலர்களின் உதவியோடு, தான் சொன்னபடியே அதைச் செய்தார். அவர்களை சகல சத்தியத்திற்குள்ளாகவும் வழிநடத்த பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவதாக வாக்குக் கொடுத்தார். (யோவா 16 : 13). பிறகு, பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்குத் திரும்புவதற்கு கொஞ்சம் முன்னதாக, அவர் இப்படிச் சொன்னார். ``பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார். (அப் 1: 8) சபையானது, அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டதென்று நாம் வாசிக்கிறோம். நாம் ஏற்கனவே பார்த்தமாதிரி, கர்த்தருடைய சபை அல்லது இராஜ்ஜியம் எருசலேம் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்படும் என்று பெயர் முதலாய் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தருடைய வசனம் இந்தப் பட்டணத்திலிருந்து எல்லா இடங்களுக்கும் போகுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்து அப்போஸ்தலர்களைப் பார்த்து, எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும். மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்" என்று கூறியுள்ளார். பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் எருசலேம் பட்டணத்தில் திரளான ஜனக் கூட்டத்திற்கு பிரசங்கித்ததற்குப் பிறகு, பிரசங்கத்தைக் கேட்டவர்களின் இருதயங்கள் குத்தப்பட்டு, நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டபொழுது, "பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று சொன்னான். அன்றைக்கு மூவாயிரம் பேர் அதின்படி செய்தனர். இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் சபையிலே சேர்த்தார். (அப் 2 : 4).

இயேசுக் கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்குப் பிறகு வந்த முதலாம் பெந்தெகொஸ்தே நாளில், நற்செய்தி அறிவிக்கப்பட்டு, கிறிஸ்துவின் சபையானது ஸ்தாபிக்கப்பட்டது என்று அப்போஸ்தலர் 2-ல் நாம் வாசிக்கிறோம். பெந்தெகொஸ்தே பண்டிகை வாரத்தின் முதல் நாளில் வந்தது. இவைகளனைத்தும் தோராயமாக கி.பி. 33ல் நடந்தேறியது.

அப்போஸ்தலர்கள் கூடியிருந்தவர்களின் பற்பல பாஷைகளில் பேசும்படியாகவும், தாங்கள் தேவனுடையவர்கள் என்று அவர்கள் நம்பும்படி அற்புதங்கள் நடப்பிக்கும்படியாகவும், தாங்கள் சகல சத்தியத்திற்குள்ளாகவும், வழி நடத்தப்படும்படியாகவும், பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றனர். (அப் 1 : 8, 2 : 1 – 4, 8).

இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்ப்பதால், சபையென்பது இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டதாக இருந்தது. அப். 2 : 41, 47) இது உண்மையானால், சபையென்பது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகவும், கிறிஸ்து அதற்குத் தலையாகவும் இருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலன் பவுல், “அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர். எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் என்று கூறியுள்ளார். இன்னும் எபேசியர் 1 : 22, 23யும், எபே 5 : 23யும் வாசியுங்கள்.

கிறிஸ்துவின் இரத்தத்தாலே சபையானது வாங்கப்பட்டது. எபேசுவிலிருந்து மூப்பர்களுக்கு பவுல், “ஆகையால், உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்” என்று கூறியுள்ளார். இன்னும் எபேசியருக்கு எழுதின போது கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்” என்றும் கூறியுள்ளார். கிறிஸ்து சபைக்காக தன் உயிரைக் கொடுத்து மரித்து, அதற்கு இரட்சகராகவும் இருக்கிறாரென்றால், அதன் பொருள் என்ன? கிறிஸ்து மிக அதிகமான முக்கியத்துவத்தை சபைக்கு கொடுத்திருக்கிறாரென்பதுதானே. கிறிஸ்து சபைக்கு அஸ்திபாரமாக இருப்பாரென்று சொல்லப்பட்டுள்ளது. பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டதற்குப் பிறகு அவர்கள் செய்த அறிக்கையின் மீது அல்லது அந்தக் கல்லின்மீது, கல்லாகிய தம்மீது தமது சபையைக் கட்டுவேன் என்று சொன்னார். (மத் 16 : 18) பவுல், போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது”– என்று கூறியுள்ளார். பேதுரு

கிறிஸ்துவைக் குறித்து பிரதான மூலைக்கல் என்று குறிப்பிட்டுள்ளார். (I பேது 2 : 1 –8).

சபையும், சபையின் அங்கத்தினர்களும் கர்த்தருடைய பெயரைத் தரித்துக் கொள்கிறார்கள். கிறிஸ்துவின் நாமமேயல்லாமல் இரட்சிப்பில்லை (அப். 4 : 12) ஆங்காங்கே உள்ள பிராந்திய சபையைக் குறித்து, வேதாகமம், கிறிஸ்துவின் சபைகள் என்று குறிப்பிடுகிறது. (ரோம 16 : 16) இது தேவனுடைய சபை என்றும் சொல்லப்பட்டுள்ளது. (அப். 20 : 28) கர்த்தரைக் கனப்படுத்தும் வேறு பெயர்களாலும் சொல்லப்பட்டுள்ளது. இதின் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். (அப் 11 : 26, அப் 26 : 28, I பேது 4 : 10).

மனமாற்றம் அடைந்தவர்கள் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகளில் நாம் படிக்கும்போது, இந்த கிறிஸ்துவின் சபைக்குள்ளாக எப்படி வருவதென்பது மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளது. நற்செய்தியைக் கேட்டபோது, தேவன் மீதும் கிறிஸ்து மீதும் விசுவாசம் வைத்தார்கள். பாவத்திலிருந்து மனந்திரும்பினார்கள். கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டார்கள். தங்களுடைய பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் (அப் 2 : 38, 2 : 47).

அவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்து, கர்த்தரை ஆராதித்து, விசுவாசத்தில் உறுதியாயிருந்து, கிறிஸ்து தமது சபைக்காக திரும்ப ஒரு நாளில் வருவார் என்ற வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர் (எபே 5 : 27, I தெச 4 : 15 – 18).

ஆக, சபையானது வேதவசனங்களில் தெளிவாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது, கர்த்தருடைய சபையை நீங்கள் எப்படிக் கண்டுபிடிக்கலாம்? இப்பொழுது நாம் பார்த்த அதே அடையாளங்களைக் கொண்டு கண்டுபிடிக்க முடியும். ஒரு சபையானது, தன்னைக் கர்த்தருடையது என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அதற்கு இந்த அடையாளங்கள் இல்லையானால் அது அவருடையது அல்ல, நீங்கள் இருக்கும் இடத்தில், கர்த்தருடைய சபை இல்லையானால், நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்து, ஒருவரையோ அல்லது அதிகமானவர்களையோ மனமாற்றமடையச் செய்வதின் மூலம், நீங்கள் கிறிஸ்துவின் சபையை அங்கே ஆரம்பம் செய்யலாம்.

**J.C. சோட்.**

## பெண்கள் பகுதி

# உண்மையைத் தேடி (பாகம் 3)

தங்களுடைய புதிய ஒத்தவாக்கிய அகராதியை பார்த்துவிட்டு, இது மிகவும் ஆர்வமாயிருக்கிறது என்று குறிப்பிட்டான் ஆண்ட்ரூ. மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் போன்ற புத்தகங்களில் பரலோக ராஜ்யம் (அல்லது) தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அதிகமாக கூறப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகங்களில் ராஜ்யத்தைக் குறித்தான குறிப்புகள் அதிகமாகக் காணப்பட்டாலும், அப்போஸ்தலர் நடபடிகள் முதல், புதிய ஏற்பாட்டின் இறுதி வரைக்கும் ராஜ்யத்தை விட சபையைக் குறித்தே அதிகமாக பேசப்பட்டிருக்கிறது. அவைகள் இரண்டும் (ராஜ்யமும் சபையும்) ஒன்றுதானா? அல்லது வேறுபட்டவைகளா? என்ற கேள்வி அவர்களுக்குள் எழுந்தது. இன்னும் சில வசனங்களைப் படித்துவிட்டு இதற்கு விடை சொல்ல முடியுமா என்று பார்ப்போம் என ஆலோசனை கூறினாள் ரேச்சல். அவ்வண்ணமே அவர்கள் இருவரும் தொடர்ந்து வாசிக்க முற்பட்டனர்.

மத்தேயு 16 : 18ல் தான் முதன்முதலாக சபை என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு உள்ளது. இயேசு தம்முடைய சீஷரை நோக்கி, மனுஷ குமாரனாகிய என்னை நீங்கள் யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். பேதுரு பிரதியுத்தரமாக, "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். அதற்கு இயேசு பேதுருவை ஆசீர்வதித்து சொன்னது என்னவென்றால், "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை? அடுத்து, "பரலோக ராஜ்யத்தின் திறவுகோலை நான் உனக்குத் தருவேன்" என்ற வசனத்தை வாசித்து வியந்து விட்டு அப்படியானால் ராஜ்யம் என்பது சபையைக் குறிக்கிறதா என்று ஆண்ட்ரூவைக் கேட்டாள். எனக்கு இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் மத்தேயு 16, கடைசி வசனத்தில் அவர்கள் வாழ்நாட் காலத்தில் ராஜ்யம் பலத்தோடே வருவதாக இயேசு வாக்களித்ததாக உள்ளது என்று பதிலளித்தான் ஆண்ட்ரூ.

அப்போஸ்தலர் 2 : 47 – ஐ சபையைக் குறித்தான மற்றுமொரு வசனமாகக் காட்டியது ஒத்தவாக்கியம். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் என்ற வசனம் முக்கியமான வசனமாகத் தோன்றியது ரேச்சலுக்கு. மத்தேயுவில் உள்ள வசனத்திற்கும், அப். நடபடிகளில்

உள்ள வசனத்திற்கும் இடையே எங்கேயோ இயேசு வாக்களித்த சபை தொடங்கப்பட்டுள்ளது. ஏனெனில் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்த்தார். இல்லாத ஒன்றில் அவர்களை அவர் சேர்த்திருக்க முடியாது. அப்போஸ்தலருடைய நடபடிகளின் தொடக்கத்தில் நடந்ததை வாசித்துப் பார்க்க ஆசைப்பட்டான் ஆண்ட்ரூ. மூன்றாம் வசனத்தில் இயேசு வானத்திற்குத் திரும்ப எடுத்துக் கொள்வதற்கு முன், ராஜ்யத்தைக் குறித்துத் தம்முடைய சீஷர்களிடத்தில் பேசினார். பின் ஆறாம் வசனத்தில், கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர், “நீங்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டும். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள். இதே வார்த்தையைத் தான் மத்தேயு 16லும் பயன்படுத்தி உள்ளார். அங்கு அவர்களுடைய வாழ்நாட் காலத்தில் ராஜ்யம் பலத்தோடு வரும் என்று சொல்லியுள்ளார். ஆக, ராஜ்யம் வரப்போவதாக இருந்தது.

ஆனால், இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் சபையில் சேர்த்தார் என்று வசனம் 47 கூறுகிறது. ராஜ்யத்தில் அல்ல என்று ஆட்சேபித்தாள் ரேச்சல். அதற்கு வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்ட விதத்தைப் பார்த்தால் அவைகள் இரண்டும் ஒன்றுதான் என்று யோசனையுடன் பதிலளித்தான் ஆண்ட்ரூ.

இராஜ்யம் பரிசுத்த ஆவியின் பலத்தோடு வரும் என்று இயேசு வாக்குக் கொடுத்தார். பரிசுத்த ஆவி சீஷர்கள் மேல் வந்து அவர்கள் பிரசங்கிக்கத் தொடங்கினார்கள் என்று அப்போஸ்தலருடைய நடபடிகளின் முதல் பகுதி நமக்குத் தெரிவிக்கிறது. பிறகு அப்பிரசங்கத்தின் முடிவில் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்த்தார் என்று கூறப்பட்டிருப்பதால் அவைகள் இரண்டும் ஒன்றுதான் என்று மேலும் விளக்கினான் ஆண்ட்ரூ.

உலகில் சபை ஒன்று இருக்கிறதா? அதில் நாம் அங்கம் வகிக்க முடியுமா? எனக் கேட்டாள் ரேச்சல்.

எனக்குத் தெரியாது. வேதத்திலே எந்த ஒரு பெயரும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இயேசுவின் சபை என்றுதான் உள்ளது. அந்தப் பெயரில் ஒரு சபையையும் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதைப் பற்றி இங்குள்ள போதகர்களிடம் விசாரிக்கலாம்.

இயேசுவின் வாழ்க்கை மற்றும் இறப்பு குறித்து எழுதப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறினதை பேதுரு சுட்டிக் காட்டினார். அது ஒரு ஆழமான பிரசங்கம். ஏனெனில் அப்பிரசங்கத்தின் முடிவிலே நீங்கள்

சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் என்று பேதுரு, அவர்களைக் குற்றப்படுத்தினபொழுது, அவர்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும், மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். நாம் ஒருவேளை அந்தக் கூட்டத்தில் இருந்திருந்து அந்தக் கேள்வியைக் கேட்டிருப்போமானால் பேதுரு என்ன நமக்குச் சொல்லியிருப்பார் என்று ஆவலுடன் கேட்டாள் ரேச்சல். அடுத்த வசனங்களைப் பார்த்துக் கொண்டு, **நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.** இந்த வசனம் ஆண்ட்ரூவுக்கு எளிமையாக இருந்தது. பேதுரு பிரசங்கித்ததை அவர்கள் நம்பினார்கள். என்ன செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டபொழுது, மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள் என்று சொன்னான் பேதுரு. அப்பொழுது அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். அந்த வரம் என்னவென்று கண்டுபிடிக்க அவர்கள் மேலும் வாசிக்க வேண்டி இருந்தது. ஆனால் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுரைகள் புரிந்து கொள்வதற்கு சுலபமாக இருந்தது. 41ம் வசனம் 3000 பேர் ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்க்கப்பட்டார்கள் என்று கூறுகிறது. பிறகு கர்த்தரே அவர்களை சபையில் சேர்த்தார் என்று 47ஆம் வசனம் கூறுகிறது.

இன்று இரவு மிக முக்கியமான உண்மைகளைத் தெரிந்து கொண்டோம், என்று ஆண்ட்ரூ திருப்தியடைந்தான். ஞாயிறு காலை பரிசுத்த மேரி ஆலயத்திற்குச் சென்று இவைகளைக் குறித்து விசாரிக்க முடிவு செய்தனர். பிறகு அதே ஞாயிறு இரவு அவர்கள் பேப்டிஸ்ட் சபைக்குச் சென்று அப். 2ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சபையைக் குறித்து அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள ஆசைப்பட்டனர்.

அப்படிச் செய்வது சரியென்று ஒப்புக் கொண்டாள் ரேச்சல். ஒத்த வாக்கியங்களைப் புரட்டி அதில் அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த பல்வேறு விதமான சபைகளைப் பார்த்தாள். அதில் கத்தோலிக்க சபை என்ற பெயர் காணப்படவில்லை. ஒருவேளை "ரோமன் கத்தோலிக்க சபை என்ற பெயரில் காணப்படலாம்" என்றான் ஆண்ட்ரூ. இதில் குறிப்பிடப்படவே இல்லை. கத்தோலிக்க சபை மிகப் பழமையானதும், பெரியதுமாயிற்றே பின் ஏன் அது வேதத்தில் இடம் பெறவில்லை என்று குழப்பத்துடன் கேட்டாள் ரேச்சல்.

எனக்கு அதைப் பற்றி தெரியவில்லை. பேப்டிஸ்ட் சபையைக் குறித்து கூறப்பட்டுள்ளதா? என்ற கேள்வியை எழுப்பினான் ஆண்ட்ரூ. ஞானஸ்நானம்,

ஞானஸ்நானகன் போன்ற வார்த்தைகள் யோவான் ஸ்நானகனைக் குறித்து பேசப்பட்டுள்ளது. யோவான் ஸ்நானகன் பேப்டிஸ்ட் சபையில் அங்கம் வகித்தானா? என்ற கேள்வியை கேட்டாள் ரேச்சல்.

எனக்குத் தெரியாது என்று பதில்ளித்தான் ஆண்ட்ரூ. ஆனால் இயேசு தமது சபையை தொடங்க வாக்குக் கொடுக்கும் முன்பே யோவான் கொல்லப்பட்டான் என்பது தனக்கு நினைவில் இருப்பதாக சொன்னான் ஆண்ட்ரூ. ஒருவேளை "பேப்டிஸ்ட்" என்பது அவன் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததைக் குறிக்கும். அவன் சபையைத் தொடங்குவதாக எங்கும், ஒன்றும் சொல்லப்படவில்லை. இன்னும் வேறு சில சபைகளைக் குறித்து எழுதப்பட்டுள்ளதா என்பதை அறிய ஒத்த வாக்கியத்தைப் புரட்டினாள் ரேச்சல். மெத்தடிஸ்ட் சபை, பெந்தெகொஸ்தே சபை (அல்) நசரேயன் சபை (அல்) லூத்தரன் சபை (அல்) யெகோவா சாட்சி போன்ற சபைகள் வேதாகமம் சொல்வதையே போதித்தால் ஏன் அவைகள் வேதத்தில் இடம் பெறவில்லை என்று மேலும் கேள்வியை அடுக்கினாள் ரேச்சல். இதுவும் எனக்குத் தெரியாது. சில போதகர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று பதிலளித்தான் ஆண்ட்ரூ.

ஆனால், இவைகளுக்கு விடை காண்பதில் மிகவும் கவனமாயிருக்க வேண்டும் என்று கூறினாள் ரேச்சல். ஏனெனில், மதத் தலைவர்கள் கூட ஆட்டுத் தோலை போர்த்தியிருக்கும் ஓநாய்களாக இருக்கக்கூடும் என்று இயேசு எச்சரித்திருக்கிறார். அவர்களின் சபைகள் பெயரே வேதத்தில் இடம் பெறாதபட்சத்தில் வேதத்தில் உள்ள காரியங்களைத்தான் போதிக்கிறார்கள் என்று எப்படி நம்ப முடியும்? சபை முக்கியமல்ல நம் விருப்பப்படி சபையைத் தெரிந்து கொண்டு, அதில் அங்கம் வகிக்கலாம் என்று மக்கள் கூறுவதை அநேகந்தரம் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இயேசு கிறிஸ்து சபையை கட்டி இருப்பதால், அவருடைய சபை மிக முக்கியம். அவர் கட்டின சபையில் தான் அங்கம் வகிக்க வேண்டும் என்று அழுத்தமாகக் கூறி முடித்தாள் ரேச்சல்.

**B.B. CHOATE** **R.R. Nayagam.**

# பரலோகத்திற்குப் பல வழிகள் உண்டா?

தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற மத நம்பிக்கையில் உண்மையுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும் இருந்தால் போதும் அந்த நம்பிக்கை, இறுதியில் தங்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் என்று பலர் நம்புகின்றனர். இவர்கள் தங்கள் **செயல்** அவ்வளவு முக்கியமானதல்ல என்றும் நம்புகின்றனர்.

மொத்தத்தில், எந்த தேவன் தங்களைப் படைத்தாரோ, எந்த தேவனுக்கு விரோதமாக மனுக்குலம் முழுவதும் பாவம் செய்ததோ அந்தத் தேவனை, ஆராதிப்பதன் மூலம் பிரியப்படுத்த மனுக்குலம் முயற்சிக்கிறது. இருப்பினும் மத ரீதியாக உலகமானது பிரிந்து கிடக்கின்றதை நாம் காண்கிறோம். வித்தியாசமான தோற்றங்களை கொண்ட மார்க்கங்களும், அவை ஒவ்வொன்றுக்கும் பலவிதமான நம்பிக்கைகளும் உண்டு. கிட்டத்தட்ட உலகிலுள்ள எல்லா மார்க்கங்களிலும் நல்லவர்களும், நேர்மையாளர்களும் நிறையவே இருக்கிறார்கள். தங்களால் முடிகின்ற அளவுக்கு தேவனுக்குப் பிரியமாய் இருக்க வேண்டுமென்றே விரும்புகின்றனர். பூமிக்குரிய இந்த வாழ்வை முடித்துச் செல்லும் பொழுது, தேவன் அவர்களுக்காகப் பரலோகத்தின் கதவைத் திறப்பார் என்று நம்புகின்றனர். ஆனால் உண்மையென்னவெனில், ஒருவன் உண்மையாளனாகவும், நேர்மையாளனாகவும் இருந்தாலே அவன் சரியானவனாக இருக்கிறான் என்று அர்த்தமாகாது. எப்படியெனில், விஷம் நிறைந்த ஒரு பாட்டிலை, அதன் மீது ஒட்டப்பட்டுள்ள தவறான சீட்டைப்பார்த்து, அது மருந்துதான் என்று எண்ணி ஒருவன், அருந்துவானானால், அவன் மரிக்கவே செய்வான். விஷத்தை மருந்து என்று, அவன் உண்மையாக எண்ணி குடித்தபடியால் விஷம் தன்னுடைய வேலையைச் செய்யாமல் இருக்குமா? இருக்காது.

அவ்வப்பொழுது உலகத்தில் பலவிதமான மோசடிகள் நடந்து கொண்டே உள்ளது. அவைகளின் வெளிவேஷம் எப்படிப்பட்டதாக இருந்தபோதிலும் அந்த மோசடிகளை உண்மையென்று நம்புகிற மக்களிடமிருந்து லட்சக்கணக்கில் பணம் அபகரிக்கப்படுகிறது. அதைப்போலவே, மார்க்க ரீதியாகக் கூட, தவறான காரியங்களை நம்பி, நித்தியத்தை இழந்து போக வாய்ப்புண்டு. சில காலத்துக்கு முன் கொரியா தேசத்தில் நடந்துவிட்ட ஒரு நிகழ்ச்சியை எண்ணிப்பாருங்கள். அவர்கள் பொய்யான மத போதனைகளை ஏற்று, 1992-ம் ஆண்டு அக்டோபர் 28ம் நாள் இரவு 8.30 மணிக்கு இயேசு வருவார் என நம்பினர். அவர்கள் அநேகரைக் காட்டிலும் பக்தியிலும், ஜெபிப்பதிலும் சிறந்தவர்கள். உண்மையாகவே, இயேசுவானவர் அவ்வேளையில் தங்கள்முன் தோன்றுவார். நாம் ஆனந்தப்

பரவசமடையலாம் என விசுவாசித்தனர். கிறிஸ்துவுக்காகக் காத்துக் கொண்டிருக்கையில், பாட்டுப்பாடி, ஜெபித்து வேதம் வாசித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவரோ அவர்கள் எதிர்பார்த்ததைப் போல வரவில்லை. தங்களுக்கிருந்த பக்தி வைராக்கியத்தினிமித்தம் அவர்களில் அநேகர் உத்தியோகங்களைத் தூக்கியெறிந்து விட்டார்கள். பிள்ளைகள் பள்ளி செல்வதற்குத் தடைவிதித்துவிட்டார்கள். கிறிஸ்துநாதர், வந்து தங்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லப்போகிறார். ஆகவே சொத்துச் சுகங்கள் தேவையில்லை என்று விற்றுவிட்டனர். இவர்கள் யாவரும் உண்மையுள்ளவர்கள். ஆனால் பொய்யை உண்மையென நம்பி ஏமாந்துவிட்டவர்கள்.

உண்மைக்கும், நேர்மைக்கும் சொந்தக்காரர்கள் கூட தவறானவர் களாகவும் இருக்கமுடியும் என்பதற்கு வேதாகமத்தில் பல உதாரணங்கள் உண்டு. பழைய ஏற்பாட்டில், முற்பிதாக்களில் ஒருவனாகிய யாக்கோபு, உயிரோடிருக்கும் தனது மகன் யோசேப்பை, மரித்துப் போய்விட்டான் என உண்மையாகவே மனதார நம்பினான். ஏனெனில், அவனுடைய மற்ற மகன்கள் யோசேப்பு துஷ்ட மிருகங்களால் பீறுண்டு செத்துப் போனான் என்பதற்கு ஆதாரமாக, அவனுடைய பலவருண அங்கிகளை இரத்தம் தோய்ந்த நிலையில் கொண்டு வந்து காட்டினார்கள். (ஆதி 27 : 31 – 33). ஆனால் உண்மை என்ன? யோசேப்பு மரிக்கவில்லை உயிரோடிருந்தான். புதிய ஏற்பாட்டில் மார்க்க ரீதியாக தாங்கள் செய்தது, தவறாக இருந்தும் அதை சரி என நம்பியதற்கு உதாரணமாக எத்தியோப்பியா மந்திரியையும், பவுலாகிய சவுலையும் காட்டலாம். ஆனால், அவர்களுடைய மதநம்பிக்கை தவறாக இருந்தபடியால், அவர்கள் அதை மாற்றிக் கொள்ள வேண்டுமெனச் சொல்லப்பட்டார்கள். பவுல் பின்னாளில், அதைக் குறித்துச் சொல்லும்போது, “முன்னே நானும் நசரேனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன் . . . . . (அப். 26 : 9 – 11) மறுபடியும் வேறொரு இடத்தில் அதே பவுல், “என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்னை உண்மையுள்ள வனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன் அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படி செய்தபடியினால் இரக்கம் பெற்றேன் (I தீமோத் 1 : 12, 13) என்று சொல்கிறார்.

நீதிமொழிகள் புத்தகத்தில் ஞானி சொல்வதை கவனமாகப் படியுங்கள். “மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்”. (நீதி 14 : 12).

நமதாண்டவர், வீட்டைக் கட்டுகிற புத்தியுள்ள, புத்தியில்லாத இரண்டு மனிதர்களைப் பற்றிச் சொல்லி, அங்கே ஒரு அருமையான கருத்தை நாம் அறிந்து கொள்ளச் செய்கிறார். அவர் “பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி

செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உனது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மெல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

மேற்சொன்ன கதையின் மூலமாக, இயேசுகிறிஸ்து ஒரு முக்கியமான உண்மையை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய நாமத்தினாலே தாங்கள் செய்வதெல்லாம் தேவனாலே ஏற்றுக் கொள்ளப்படும் என்று அநேகர் தவறாக, நம்பிக் கொண்டிருக்கின்றனர் என்பதே அந்த உண்மை. இந்தத் தவறான நம்பிக்கை இப்படிப்பட்டவர்களை நியாயத்தீர்ப்பின் நாளில் காப்பாற்ற நித்திய நரகத்திற்குத்தான் செல்வார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் செய்கையில் ஞானமற்றவர்களாக நடந்து விசாலமான வழியில் சென்றவர்கள் (மத் 7 : 13)

தேவனுக்கும், மனுஷனுக்கும் மத்தியஸ்தம் செய்யும்படி தேவன் இயேசுகிறிஸ்துவை ஏற்படுத்தியுள்ளார். அவர் மூலமாக மட்டுமே ஒவ்வொருவரும் தேவனிடத்தில் ஒப்புரவாக முடியும் (I தீமோத் 2 : 5, 2கொரி 5 : 19–21) அவர் தான் வழி (யோவா 14 : 6) அவர் மூலமாக, நாம் இரட்சிப்புக்கு என்ன செய்ய வேண்டுமென்பதை அறிகிறோம். (மாற் 16 : 16). தேவன் ஏற்றுக் கொள்ளும்படியான ஆராதனையை எப்படி ஏறெடுக்க வேண்டும் என்று அவர் நமக்கு போதித்துள்ளார். (யோவா 4 : 24) நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளார். ( I பேது 2 : 24) அவர் சொல்வதைக் கேட்பதும், அதன்படி செய்வதுமே நமது கடமையாகும. அவர் சொல்வதை அட்சரம்பிசகாமல், அப்படியே செய்வதின் மூலம் தான் நம்முடைய பாதையை நீதியின் பாதை என்றும் பரலோகத்திற்கு வழிகாட்டும்பாதை என்றும் நாம் உறுதி செய்ய முடியும். அப்படிச் செய்ய தேவன் நமக்கு உதவி செய்வாராக.

**Sunny David** **RAJANAYAGAM**

## ஆவியின் கனி

# சாந்தம்

சாந்தம் தேவனுடைய சாயல். "கர்த்தர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர்" என்று சங் 14, 5:8ல் தாவீது கூறுகிறான். "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று மத் 11 : 29ல் இயேசு கூறுகிறார்.

சிருஷ்டிப்பின் வரலாறு குறித்து வேதத்தில் பார்ப்பீர்களானால் உலகத்தையும் அதில் உள்ள அற்புதமான எல்லா படைப்புகளையும் தேவன் வார்த்தையினால் உண்டாக்கினார். ஆனால் மனுஷனை உண்டாக்கும்போது நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் உண்டாக்குவோமாக என்று தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார். (ஆதி 1 : 26 – 27). ஆனால் சில காலங்களுக்கு பின்பு தேவன் பூமியை பார்த்தார். அது சீர் கெட்டதாயிருந்தது. எவ்வாறு சீர் கெட்டுப்போனது என்று பார்த்தால் தேவசாயலாக உண்டாக்கப்பட்ட மனுஷர் யாவரும் பூமியின் மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள் என்று ஆதி 6 : 12ல் கூறப்பட்டுள்ளது. இதனிமித்தம் தேவன் தம்முடைய சிருஷ்டிப்புகள் அனைத்தையும் ஜலத்தினால் அழித்தார். பின்பு அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மனுஷனால் மனுகுலம் உலகத்தில் பெருகினது. அநேகம் ஆண்டுகள் கழித்து கிறிஸ்துவின் யுகத்திற்குட்பட்ட மனுஷர்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். எல்லாரும் வழிதப்பி ஏகமாய் கெட்டுப் போனார்கள் என்று", (ரோ 3 : 12). "இதோ தேவன் மனுஷனை செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயத் தந்திரங்களை தேடிக் கொண்டார்கள்; இதை மாத்திரம் கண்டேன்" என்று பிர 7 : 29ல் சாலமோன் ஞானி கூறுகிறார். இதற்குக் காரணம் மனுஷன் மாயையான இந்த உலகத்தின் மீதும், அதில் உள்ளவைகளிலும் கொண்டுள்ள ஆசையே! என்பதை ஆராய்ந்து பிரசங்கியின் புஸ்தகத்தில் சாலமோன் ஞானி எழுதுகிறார். மனுஷனுடைய ஆசை நிறைவேறாத பட்சத்தில் அதை எப்படியேனும் அடைய வேண்டும் என்ற எண்ணத்தினால் பல தந்திரமும், வஞ்சகமுமான வழிகளை கையாளக் கூடியவனாக காணப்படுகிறான். இந்நிலையில் மனுஷன் தான் தேவசாயலாக, சாந்தமுள்ளவனாக உண்டாக்கப்பட்டவன் என்பதையே மறந்து போகிறான். நோவாவின் நாட்களில் வாழ்ந்த மனுஷர்களின் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்று கர்த்தர் கண்டார்; என்று ஆதி 6 : 5ல் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு மனுஷனின்

தோற்றம் சாந்தமற்றதாயும் அவனுடைய இருதயத்தின் பொல்லாத நினைவுகளை வெளிப்படுத்தும் பொல்லாத தோற்றமுடையதாயும் காணப்படுகின்றது. தந்திரமான அல்லது வஞ்சகமான வழிகளைக் கையாண்டால்தான் உலகத்தில் நன்றாக வாழமுடியும் என்ற எண்ணம் மனுஷனுடைய உள்ளத்தில் இடம் பெற்றுள்ளது. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது மலை பிரசங்கத்தில் சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று கூறினார். (மத் 5 : 5).

இன்று அநேகர் சமுதாயத்தில் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண பலவான்களையும், துன்மார்க்கரையும் நாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இது சரியான வழி அல்ல. இவ்விதமான அணுகுமுறையில் தற்காலிகமான தீர்வுகாண முடியுமேயன்றி நிலையான தீர்வு காண்பது அரிது. இவ்விஷயத்தில் சாலமோன் ஞானி. "கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான்; நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்" என்று நீதி 15 : 18ல் கூறுகிறார். எனவே பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் என்று ஞானி கூறுகிறான். (நீதி 16 : 32).

இந்நாட்களில் இரண்டே பிள்ளைகள் உடைய குடும்பங்களில் பெற்றோர்கள் பிள்ளைகளை வளர்ப்பதிலும், அவர்களை வழி நடத்துவதிலும் அவர்களுக்கு ஏற்படும் கோபத்தைப் பார்த்தால் சில நேரத்தில் அது உச்சநிலையை அடைந்து உடல் நலத்தையே பாதிப்படைய செய்கின்றது. இவ்விதமாகத் தான் பிள்ளைகளை நல்வழிப்படுத்த முடியும் என்பது பலருடைய எண்ணம். குடும்பத்திலேயே இவர்களுடைய நிலை இவ்வாறு இருந்தால் மாறுபட்ட குணங்களை உடைய சமுதாயத்தில் இவர்கள் நிலை எப்படியிருக்கும் என்பதை சொல்ல வேண்டியதே இல்லை. ஆனால் பழைய ஏற்பாட்டின் காலத்தில் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டு வந்த புருஷர்கள் மட்டும் 6லட்சம் என்றால் அவர்களைச் சார்ந்தவர்களையும் சேர்த்து கணக்கிட்டால் சுமார் 18 லட்சம் மக்களை ஒரே மனுஷன் வழிநடத்தி வந்திருக்கின்றான். அந்த ஜனங்கள் பொல்லாத சிந்தையுடையவர்களாய் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு விரோதமாய் செயல்பட்ட போதெல்லாம் பல இடங்களால் தேவன் அவர்களை தண்டிக்கவும், அழிக்கவும் நினைத்த போது அவர்களை வழிநடத்தி வந்த மோசே அவர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேசி அவர்களை காப்பாற்றி வழிநடத்தி சென்றான் என்றால் அதனுடைய ரகசியம் என்னவென்று சிந்திக்க தோன்றுமல்லவா? எண் 12 : 3ல் மோசேயானவன் பூமியிலுள்ள சகலமனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான் என்று

எழுதப்பட்டுள்ளது. எனவே சாந்த குணமுள்ளவர்கள் தங்களுடைய குடும்பத்தை நல்ல வழியில் நடத்தவும், சமுதாயத்திற்கும் ஒரு நல்ல குடும்பமாக திகழவும் முடியும்; என்பதற்கு மோசே ஒரு நல்ல எடுத்துக்காட்டாய் திகழ்கிறான்.

அன்பார்ந்த தேவனுடைய பிள்ளைகளே! அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபத்தில் : நீயோ தேவனுடைய மனுஷனே துன்மார்க்கத்திற்கேதுவான ஐசுவரியத்தின் மீதான ஆசை, பண ஆசை இவைகளை விட்டோடி சாந்த குணத்தை அடையும்படி நாடு என்று I தீமோ 6 : 11ல் கூறுகிறான். கொலோசே பட்டணத்து விசுவாசிகளுக்கு எழுதின நிருபத்தில் : நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய் சாந்தத்தை தரித்துக் கொள்ளுங்கள் என்று கொலோ 3 : 12ல் கூறுகிறான். தீத்துவுக்கு எழுதின நிருபத்தில் : ஒருவனையும் தூஷியாமலும், சண்டை பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் நினைப்பூட்டு என்று கூறுகிறான்; (தீத்து 3 : 2). சாந்தகுணமுள்ளவன் அவன் தன்னை காத்துக் கொள்வதோடு விசுவாசத்தில் பலவீனமான மற்றொரு சகோதரனையும் சீர் பொருந்தப் பண்ணி அவனையும் ஆதாயப்படுத்திக் கொள்வான். (கலா 6 : 1). இதுவே ஆவியின் கனியான சாந்தத்தின் பணி.

## சாந்த குணமுள்ளவர்களுக்கு தேவன் அருளும் ஆசீர்வாதங்கள் :

1) சாந்தகுணமுள்ளவர்கள் புசித்துத் திருப்தியடைவார்கள் (சங் 22 : 26)

2) சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, தமது வழியை போதிப்பார்(சங் 25 : 9)

3) சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார் (சங் 149 : 4)

4) கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார் (சங் 147 : 6) நீங்களும் சாந்தமுள்ளவர்களாய் இருந்து தேவ ஆசீர்வாதங்களைப் பெற தேவன் கிருபை செய்வாராக!.

**ஹென்றிமோகன்**
**நீலகிரி.**

# செவித்தினவு

அப்போஸ்தலனாகிய பவுல் இளம் பிரசங்கியாகிய தீமோத்தேயு என்பவருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் கீழ்வரும் அறிவுரையை வழங்குகிறார். "நான் தேவனுக்கு முன்பாகவும் உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தோர்களையும் நியாயந் தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது.

சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைக் பொறுக்க மனதில்லாமல், **செவித் தினவுள்ளவர்களாகி** தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாய்ச் சேர்த்துக் கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்.

நீயோ, எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய் உன் ஊழியத்தை நிறைவேற்று (2 தீமோ 4 : 1 – 5.

எந்த சூழ்நிலையிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தவறவேண்டாம் என்று திட்டமான கட்டளை கொடுத்தாலும், மக்களுடைய மன நிலைகளையும் அவர் அறிந்தே இருந்தார். மக்கள் செவித்தினவுள்ளவர்கள். புதிய புதிய விஷயங்களைக் கேட்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறபடியால் சத்தியத்தைவிட கட்டுக் கதைகளே அவர்களுக்குப் பிடிக்கும் என்பதையும் அறிந்தே இருந்தார்.

அதே தீமோத்தேயுவுக்கு தனது முதலாம் நிருபத்தில் வேறொரு விஷயத்தையும் தெளிவுபடுத்துகிறார். "ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்.

விவாகம் பண்ணாதிருக்கவும்

விசுவாசிகளும், சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர்கள் கட்டளையிடுவார்கள்.

தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்

கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளத்தக்கதல்ல.

அது தேவ வசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும் என்று கூறுகிறார் (1 தீமோ 4 : 1 – 5).

இங்கே மக்கள் ஒரு கால கட்டத்தில் மனிதர்களுடைய பொய்ப் போதகத்துக்கும், பிசாசின் வஞ்சனை நிறைந்த கள்ள உபதேசங்களுக்கும் செவி மடுத்து சத்தியத்தை விட்டு விலகிப் போவார்கள் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கிறார்.

மேலும், எபேசு பட்டணத்து மூப்பர்களோடு கலந்துரையாடும் போது "ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்த சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை மழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்.

நான் போன பின்பு, மந்தையைத் தப்பவிடாத கொடித்தான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.

உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்''களென்று அறிந்திருக்கிறேன்.

ஆனபடியால், நான் மூன்று வருட காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்" என்கிறார் (அப் 20: 28 – 31).

இந்தச் சந்தர்ப்பத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் உண்மை மனதோடு சத்தியத்தைப் போதித்ததாகவும் அதில் உறுதியாய் நிலைத்திருக்கும்படி சகோதரர்களை ஊக்குவித்தாலும், வருங்காலத்தில் என்ன நடைபெறும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டுகிறார். கள்ளப் போதகர்கள் சபைக்குள் ஊடுருவி, மந்தைக்குள் ஓநாய்கள் புகுந்து ஆடுகளைக் கவர்ந்து செல்வதுபோல், கர்த்தருடைய பிள்ளைகளை வஞ்சித்து தங்கள் வசமாக்கிக் கொள்வார்கள் என்றும், சபைக்குள்ளேயே சில சுயநலவாதிகள் தங்கள் சாகசப் பேச்சுகளால் விசுவாசிகளைக் கவர்ந்து இழுத்து சபையை பலவீனப்படுத்தி பிரிவினை உண்டாக்குவார்கள் என்றும் எச்சரிக்கிறார். ஆகையால் பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் ஒப்படைத்துள்ள பொறுப்பைக் குறித்து அசதியாய் இராமல் உஷாராயிருங்கள் என்று அறிவுரை கூறுகிறார். இன்னும் ஒரு சம்பவத்தைக் கூடப் பார்ப்போம்.

அப்போஸ்தலன் பவுல் அத்தேனே பட்டணத்தில் இருந்த போது, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி அவர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். அப்பொழுது எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனோடே வாக்குவாதம் பண்ணினார்கள். சிலர் இந்த வாயாடி என்ன பேசப் போகிறான் என்றார்கள். சிலர் இவன் அந்நிய தேவதைகளை

அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும், உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்.

அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக் கொண்டு போய், நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள்.

அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும் நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை'' என்று வாசிக்கிறோம் (அப் 17 : 18– 21).

இங்கேயும் கவனித்துப் பாருங்கள் அத்தேனே பட்டணத்தில் வாழ்கின்ற மக்களும் அங்கே வந்து தங்கியுள்ள அந்நியரும் பவுல் பிரசங்கத்தில் ஏதாவது புதுமையும் வித்தியாசமான நூதனமான செய்திகளும் இருக்குமா? என்று தான் எதிர்பார்த்தார்கள். மற்றபடி அவன் பேசுகிறது உண்மையா? அதினாலே நம்முடைய வாழ்க்கை எவ்வாறு சீரடையும் என்ற சிந்தனையெல்லாம் கிடையாது.

மேலே நாம் பார்த்த எல்லா வசனங்களையும் தொகுத்துச் சிந்தித்துப் பார்த்தால் ஒரு காரியம் தெளிவாகத் தெரிகிறது. விசுவாசிகளாயிருக்கட்டும் அல்லது அவிசுவாசியாகவே கூட இருக்கட்டும், பிரச்சினை ஒன்று தான்.

தேவன் விளம்பின சத்தியங்களை அப்படியே கேட்டு ஏற்றுக் கொள்வதை விட நூதனமான, புல்லரிக்கும் மசாலா செய்திகள், மயிர்க் கூச்செரியும் திடீர் திருப்பங்கள் இப்படி ஏதாவது செவிக்குக் கிடைக்குமோ என்று தான் எதிர்பார்க்கிறார்கள். இந்த மனநிலையைத் தான் வேதம் செவித்தினவு என்று கூறுகிறது. இயேசு கிறிஸ்து அடிக்கடி, “காதுள்ளவன் கேட்கக்கடவன்'' என்று கூறினாரே அதற்கு என்ன காரணம் என்றால் மக்களுடைய மனம் எதை நாடுகிறது என்று அவர் அறிந்திருந்தபடியால் தான்.

நாம் சாப்பிடும் உணவுப் பொருள்களிலேயே நமக்கு வேண்டிய சத்துப் பொருள்களெல்லாம் இருக்கிறது, இருந்தாலும் அதற்குக் காரம் சேர்த்து, எண்ணெய், நெய் போன்றவைகளை, ஊற்றி வறுத்து, தாளித்து சுவையேற்றி இரசித்துச் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்கிறோம். டாக்டரிடம் போனால் காரத்தைக் குறை புளியை அகற்று என்று அறிவுரை கூறுகிறார். இதே நிலை தான் சத்தியத்தைக் கேட்கிற விஷயத்திலும். அதாவது உண்மையை மட்டும் சொன்னால் அது அவர்களுக்குப் 'போர்' அடிக்கிறது. அந்த வெறுப்பை வெளிக்காட்ட சத்தியத்தின் தன்மையைப் பற்றிக் கேள்விகள் கேட்பது, சந்தேகப்படுவது ஆகிய தகாத காரியங்களில் ஈடுபடுகிறார்கள். தேவன் தமது அநந்த ஞானத்தால் விளம்பின பேருண்மைகளை விட சிறுமதி படைத்த

மனிதன் கண்டுபிடிக்கிற சித்தாந்தங்கள், தத்துவங்களின் மீது நாட்டம் கொள்கிறார்கள்.

இந்த விபரீதமான போக்கு நமக்கு வியப்பைக் கொடுத்தாலும் இன்று மட்டுமில்லை. ஒவ்வொரு தலைமுறையிலும் இதுவே நிலை.

மக்கள் குரங்கு மனம் படைத்தவர்கள். குரங்கு கிளைக்குக் கிளை தாவுவதைப் போல மனிதர்களும் ஒரு நாளைக்கு ஒரு கொள்கை, மறு நாளைக்கு வேறு கொள்கை என்று புதிது புதிதாக மாறிக் கொண்டேயிருக்கிறார்கள். அவைகள் தேவனுடைய சத்தியத்துக்கு முற்றிலும் முரண்பாடாக இருந்தாலும் தர்க்க நியாயத்துக்கு ஒத்துவராததாக இருந்தாலும், அவைகளையும் ஏற்றுக் கொள்ள ஒரு கூட்டம் இருந்தே இருக்கிறது.

கிறிஸ்துவின் சபையில் கூட வேதாகமம் கூறுகிற அடிப்படைச் சத்தியங்களையே கேட்டுக் கேட்டு சலிப்படைந்து விடுகிறார்கள். ஆகையால் எழுப்புதலான – ஆர்ப்பாட்டங்கள் நிறைந்த பிரசங்கங்கள் கேட்கத் துடிக்கிறார்கள். ஆகையால் வெளியூர்களிலிருந்து புதுப்புது பிரசங்கிமார்களை வரவழைத்து அவர்கள் மூலமாகக் கொஞ்சம் வித்தியாசமான செய்திகளைக் கேட்க முயலுகிறார்கள். அல்லது இதுவரை தாங்கள் கேட்டிராத புதிய புதிய தலைப்புகளில் பிரசங்கம் கேட்டால் பரவாயில்லை என்று நினைக்கிறார்கள்.

அப்படி அவர்கள் விரும்புவது அவர்கள் சத்தியத்தை ஆழமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படிக் கற்றுக் கொண்டதை எடுத்துச் சென்று சத்தியம் கேட்காத மக்களுக்கு அறிவித்து அவர்களையும் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரவேண்டும் என்ற ஆர்வத்தில் அல்ல; இப்படியாவது நம்முடைய செவிகளுக்குச் சில புதிய செய்திகள் கிடைத்தால் நம்முடைய செவித்தினவு அடங்காதா? என்ற அற்ப ஆசையினால் தான். சகோதரர்களே, இந்த விபரீதமான போக்கு ஆபத்தானது. நம்மை இரட்சிப்புக்குள் வழி நடத்திய தூய சத்தியமாகிய எருசலேமின் பழமையான கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் அக்கறையும் நம்பிக்கையும் குறையும் மனப்போக்கு நமக்கு ஏற்படுவது நாம் ஆவியில் பலவீனமடைகிறோம் என்பதற்கு அறிகுறி. சரீரம் பலவீனம் அடைந்தால் நோய் எப்படித் தாக்குகிறதோ அதே போன்று நாம் ஆவியில் பலவீனமடையும் போது கள்ள போதகங்கள் எளிதாக உள் நுழைந்துவிடும். அது நம்முடைய விசுவாசத்தில் ஓட்டை போட்டு நாளடைவில் விசுவாசமாகிய கப்பலைக் கவிழ்த்துப் போடும்.

என் நண்பர்களே, சகோதரர்களே, வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு. வேதம் நமக்குக் கொடுக்கிற எச்சரிப்பை அசட்டை செய்யாதீர்கள். நமக்கு எது நல்லது என்பது கர்த்தருக்குத் தெரியும். சத்தியத்துக்கு மாற்றே கிடையாது. கர்த்தருடைய வசன ஆதாரமில்லாத எந்தக் காரியத்தையும் உதறியெறிய ஏன் தயக்கம்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னதை நினைவுகூருங்கள். "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். (யோவான் 14 : 6).

# மன உந்துதல்

இரண்டு சிறுவர்கள் ஒரு குதிரையைப் பிடித்து இழுத்து வந்து புல்லைத் தின்னும்படி தொட்டியில் அதை விட்டனர். ஆனால் அது இயலாமல் போய்விட்டது. அவர்களுடைய தந்தை அங்கு வந்து பிள்ளைகளே! நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டார். ஒருவன் சொன்னான் "நாங்கள் இந்தக் குதிரையை சாப்பிடச் செய்கிறோம்" என்றான். அதற்கு அவர்களுடைய தந்தை நீங்கள் இந்த குதிரையை சாப்பிடச் செய்ய முடியாது. ஆனால், சாப்பிடும்படி அதின் மனதை தூண்ட முடியும். எப்படியென்றால் கொஞ்சம் புல்லை கையிலிருந்து அதை குதிரைக்கருகில் காண்பித்து, அதை புல் தொட்டிக்கருகில் கவர்ந்திழுக்க கூடும் என்றார் மன உந்துதல் என்பது நம்முடைய செயலுக்கு பொறுப்பான ஒரு திறவுகோல் ஆகும்" மிருகமாக இருந்தாலும் மனிதனாக இருந்தாலும் இந்த மன உந்துதலின் மூலமாகத்தான் செயல்படுகிறார்கள்.

ஒவ்வொரு பிராந்திய சபையிலும் 10லிருந்து 15 சதவீதத்தினர் 85 சதவீத பணிகளை செய்வதாக ஒரு புள்ளி விபரம் கூறுகிறது. இது ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் எப்படி பொருந்துகிறதோ? தெரியாது. ஆனால் 85லிருந்து 90 சதவீதத்தினர் பிராந்திய சபையின் எந்தப் பணிகளிலும் பங்கு கொள்வதே கிடையாது. ஏன்? "சாம்" என்பவர் மூப்பருடைய பணியை நிறைவேற்றுவதில் கடினமாக உழைக்கிறார். "ஜோ" என்பவர் உதவிக்காரராக இருப்பதால் தன் விரலை உயர்த்திக் காட்டுவதில் கடமை தவறாமல் இருக்கிறார்.

பிரசங்கியார் "புல் பிட்டை" துடைப்பதிலேயே கருத்தாக இருக்கிறார். ஆனால் மக்களுடைய பணி மட்டும் மிகவும் மோசமாக இருக்கிறது. காரணம் என்ன? என்ற இந்த கேள்விக்கு பதில் என்ன தெரியுமா? தனிப்பட்ட "மன உந்துதல்" **(Motivation)** இல்லாமல் இருக்கிறது.

ஒரு தனி நபருடைய செம்மையான பணி என்பது கீழ்க்கண்ட 4 உள்ளான காரியங்களை உள்ளடக்கியுள்ளது.

1. என்ன தேவையென்பதை புரிந்து கொள்ளும் திறமை 2) ஒரு காரியத்தை செய்து முடிக்கும் தகுதி 3) ஆவிக்குரிய ஜீவியத் தன்மை 4) அவனுடைய உள்ளான மன உந்துதல். இந்த தனிப்பட்ட தகுதிகள் சரியாகவும் முறையாகவும் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் செயல்பட்டால் அவனுடைய ஜீவியத்தின் முடிவு வெற்றி! வெற்றி!!

இந்த மன உந்துதலின் **(Motivation)** முக்கியத்துவததை தலைமையாளர் கண்டிப்பாக சபை உறுப்பினர்களுக்கு சொல்லி புரிய வைத்தல் அவசியம்.

கர்த்தருடைய பணியை ஒரு சபை உறுப்பினர் எந்தெந்த வகைகளில் செய்தால் அவர் வெற்றிகரமாக செய்து முடிப்பார் என்பதையறிந்து அந்தந்த வகைகளில் அவர் மனதை ஊக்கப்படுத்துவது பிரசங்கியின் கடமையாகும்.

## மனித மன உந்துதலுக்கு அடிப்படையான உண்மைகள்

தேவையின் (Needs) அடிப்படையிலேயே மன உந்துதல்கள் தோன்றுகின்றன. இந்த தேவை (Need) ஒரு வேளை உண்மையான தேவையாக இருக்கலாம் அல்லது ஏற்படுத்தப்பட்டதாக இருக்கலாம். அல்லது, கற்பனையான தேவையாகவும் இருக்கக்கூடும். இந்த தேவைகளை ஒவ்வொரு மனுஷனும் வித்தியாசப்பட்ட வழிகளில் அடைய அவனுக்கு தூண்டுதல்கள் ற்படுகிறது. இந்த தூண்டுதல்கள் இரண்டு வகையில் ஏற்படுகிறது. 1) மனோரீதியானது **(Psychological)** 2) உடல் ரீதியானது **(Physiological)** இந்த தூண்டுதலினாலேயே அவனுடைய தேவைகளை அவன் நிறைவு செய்ய இரவும் பகலும் உழைக்கின்றான். பசியுள்ளவன் சாப்பிடும்படி தூண்டப்படுகிறான் ாரணம் அவனுடைய தேவை அது. தேவை நம்மை தூண்டுகிறது. தேவையில்லையெனில் நாம் தூண்டப்படமாட்டோம்.

தலைமையாளரின் பணியென்னவென்றால், பணியின் தேவைகளுக்கேற்ப, சபை உறுப்பினர்களை தகுதிபடுத்துவது, அப்பொழுதுதான் அவர், வெற்றிகரமாக அந்த பணியை செய்து முடிப்பார். இந்தக் காரணத்தினால் மனிதனின் தேவைகளைப் பற்றி தலைமையாளர் மிகவும், தெளிவுள்ளவராக கண்டிப்பாக இருக்க வேண்டும். இந்த தேவைகளில் சிலவற்றை நாம் ஆராய்ந்து பார்ப்போம்.

1) உடல் ரீதியான தேவைகள் : சரீரம் உயிர் வாழத் தேவையான சில தேவைகள். (உ.ம்) உண்பது, குடிப்பது, (தண்ணீர்), சுவாசித்தல் முதலானவைகள்.

2) பாதுகாப்பு மற்றும் தற்காப்புத் தேவைகள் : இந்தத் தேவைகள் தன்னை பாதுகாக்கவும் தன்னுடைய அன்பார்ந்தவர்களை காப்பாற்றவும் தன்னுடைய ஆஸ்தியை தற்காக்கவும் தேவை.

3) சாதனைகளின் தேவைகள் : ஒன்றை செய்து முடிக்க வேண்டுமென்ற விருப்பத்தோடு தொடர்புடையது. இது நம்மை சில இலக்குகளை நிர்ணயித்து, அதை அடைய வேண்டுமென்று நம்மை அயராது உழைக்கச் செய்கிறது.

4) தனிப்பட்ட சமுதாயத் தொடர்பு தேவைகள் இந்த தேவையின் மூலம் நாம் மற்றவர்களோடு சேர்ந்திருக்கிறோம். இந்த தேவை ஒருவனை சமூக சேவைகளை செய்ய தூண்டுகிறது.

5) சுயமதிப்பீட்டுத் தேவை : இந்த தேவையினால்தான் மனிதனுக்கு சுதந்திரம் தேவையாக இருக்கிறது. மதிப்பீட்டை உயர்த்தி கொள்ளுகிறான். அதிகாரத்தை அலைந்து தேடுகிறான். எல்லோருக்கு முன்பாக தன்னை பெரிதுபடுத்தி காட்டுகிறான்.

6) பயனுள்ள தேவை : மிக முக்கியமான தேவை மனிதன் பயனுள்ளவன் என்பதற்கு அடிப்படையான தேவைகள் .

7) அன்பின் தேவை : மனிதன் தன்னை மற்றவர் நேசிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றான். இந்த தேவைகள் யாவும் திருப்திபடாத தேவைகள் ஆகும். இந்த தேவைகள் யாவும் உந்துதலின் உபகரணிகளினால் ஊக்கப்படுத்தல் அவசியம். மேற்கண்ட யாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதும், ஒன்றையொன்று சார்ந்திருக்கக் கூடியதுமாகும். இதனால்தான் ஒவ்வொரு நபருக்கும் திருப்திபடும் மன பரப்புகளும் திருப்தியற்ற மனபரப்புகளுமுண்டு.

**எப்படி தலைமையாளர்கள் மன உந்துதலினால் மற்றவர்களை ஊக்கப்படுத்த முடியும்.**

மேற்கண்ட 7 காரியங்களும் சபை பணிகளுக்கு மன உந்துதலின் தேவைகளாக பயன்படுத்தபடுதல் அவசியம். கிறிஸ்தவம் ஒவ்வொரு மனிதனுடைய தேவைகளையும் முறையீடு செய்கிறது. விசேஷமாக சாதனைகளின் தேவைகள் தன்னை தகுதிப்படுத்தும் தேவைகள், பயனுள்ள தேவைகளை கிறிஸ்தவம் முறையீடு செய்கிறது. ஒவ்வொரு சபையாரும் மாபெரும் சாதனைகளை சாதிக்க முடியும். கீழ்க்கண்டவைகளை முறையாக கடைபிடிப்பதினால்,

1. பிராந்திய சபைகளின் வேலைகளின் திட்டங்களையும், இலக்குகளையும் அமைத்து கொள்ள அங்கத்தினர்களுக்கு உதவ வேண்டும்.
2. பணிகளை ஏற்று நடத்த சில உபயோகமான பொறுப்புகளையும் அதிகாரங்களையும் அளித்தல் அவசியம்.
3. சபையார் சில தீர்மானங்களையெடுக்க அனுமதித்தல் வேண்டும்.
4. பணிகளை செம்மையாக செய்து முடிக்க சரியான அனுமதியளித்தல் அவசியம்.
5. சபையாரிடம் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கேட்பது நல்லது.
6. சபையாரை சில சிறிய சிறிய செயல்படும் குழுக்களாக அமைத்து

வைப்பது இது. பணியாற்ற ஒருங்கிணைப்பாக காணப்படும்.

7. எல்லா பிரச்சனைகளுக்கும் தேவைகளுக்கும் எப்பொழுதுமே பரிசுத்த வேதாகமத் தீர்வுகளையே நாடவேண்டும்.

இந்த முறைகளினால் சபையார் கர்த்தருடைய் பணியில் மனநிறைவு பெறுவது இயலும். உள்ளான சமாதானத்திற்கு அச்சாரமாக அமைவார்கள். இந்த சமாதானம் தேவனுடைய முக்கியமான பணியை நாம் செம்மையாக செய்வதற்கு நம்மை உறுதிப்படுத்தி, நம்மை தெளிவுபடுத்துகிறது. தேவனுடைய அளவற்ற அ்ன்பு நமக்கு எப்போதும் உண்டு. அவர் நம்மை தம்முடைய பணியில் பயன்படுத்த அவர் விரும்புகிறார்.

இந்த மகத்தா்ன பணியின் மன உந்துதலாக இருப்பது நம்முடைய ஆவிக்குரிய மேன்மைகள். இது ஒருவனை மகிழ்ச்சியாக்கும். மனநிறைவு அடையச் செய்யும். இந்த அளவீட்டின்படி அவன் ஒரு வெற்றியாளனாக இல்லாமலிருந்தும், அவனை நிறைவுபடுத்தும் மகிழ்ச்சிபடுத்தும். விலைமதியாத சத்தியம், நீதி, நேர்மை, உண்மை, அழகு, (உள்ளான), வளர்ச்சி தகுதியுள்ள சமாதானம் போன்றவைகளின் மன உந்துதல்கள், கிறிஸ்தவத்தில் ஒவ்வொரு மனிதனுடைய இருதயம் என்ற நிலத்தில் மேற்கண்ட இந்த பண்புகள் யாவும் நாட்டப்பட்ட நல்ல விதைகளாகும். இவைகளிலிருந்துதான் இவர்களுடைய சந்தோஷம் பிறக்கின்றது.

இந்த பாடத்தில் ஒவ்வொரு தலைமையாளரும் எப்படி ஒவ்வொரு சபையாரையும் மன உந்துதலில் வழி நடத்த முடியும் என்று படித்தோம். இந்த பாடத்தை மிகவும் கருத்தாக நாம் படித்தால் நல்லது, காரணம் ஒவ்வொரு சகோதரனையும் கர்த்தருடைய பணியில் இணைப்பதற்கான திறவுகோலாக இருக்கிறது. இது இந்த மன உந்துதலின் (Motivation) மூலமாகத்தான் சாத்தியப்படும். இந்த முக்கியமான தளத்தில் ஒவ்வொருவரையும் பயன்படுத்தும் சிறந்த பணியை உங்களாலும் செய்து முடிக்க முடியும்.

நன்றி

**J.J. டர்னர்**

**சகோ. வே. தானியேல் துரைராஜன்**

**திருச்சி 1.**

# தேவனுடைய ஜனங்கள்

கிறிஸ்தவர்கள் தேவனுடைய ஜனங்களென்று எபி 4 : 9ல் குறிப்பிடப்பட்டுள்ளனர். பேதுரு அப்போஸ்தலன் மனமாற்றத்திற்குப் பிறகே நாம் தேவனுடைய ஜனங்களென்று கூறுகிறார். (I பேது 2 : 9 – 10) ஒரு சிறப்பான பொருளின் அடிப்படையில் நாம் தேவனுடைய ஜனங்களாக இருக்கிறோம். அவர் நம்மைக் கிரயப்படுத்திக் கொண்டார். ஆகவே, நாம் அவருக்குச் சொந்தமாகிறோம். (I கொரி 6 : 19, 20) அவருடைய பிள்ளைகளாய் இருக்கும்படி அவர் நம்மைக் கட்டாயப்படுத்தவில்லை. அவருடைய அழைப்புக்கு நாம் செவி சாய்த்தோம். அவருடைய பிள்ளைகளாய் இருப்பதால், நமக்கு நிறைய பொறுப்புகள் உள்ளது. தயவு செய்து அவைகளில் நான்கை என்னோடு சேர்த்து கவனியுங்கள்.

## I. நோக்கமுடைய ஜனங்கள்

இப்பூமியின் வாழ்க்கையில் தேவனுடைய ஜனத்திற்கு ஒரு உன்னத நோக்கமுண்டு. உல்லாசமும், செல்வமும் மனிதனின் உன்னத நோக்கமல்ல. தேவனுக்கு பயந்து, அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதே எல்லா மனிதர் மேலும் விழுந்த கடமை என்று வெகு காலத்துக்கு முன்பே சாலமோன் சொல்லியுள்ளான். (பிர 12 : 13) புதிய ஏற்பாடு இந்த நோக்கத்தை தெளிவாக தாங்கி நிற்கிறது. தேவனைப் பிரியப்படுத்தவே நாம் இங்கே உள்ளோம் (I தெச 4 : 1) நியாயத் தீர்ப்பின் நாளிலே, நாம் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கவர்களாயிருக்க வேண்டும் என்ற எண்ணமே, நமது எல்லா பிரயாசங்களிலும் இருக்க வேண்டும். (II கொரி 5 : 9 – 10). சொத்து, சுகங்களின் மீது வாழ்க்கை கட்டப்பட்டிருக்க வில்லை. (லூக். 12 : 15) நம்முடைய பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்த்து வைக்க வேண்டும். (மத் 5 : 16).

நம்முடைய அன்பும் பிரயாசங்களும் ஆவிக்குரியதாகவே இருக்க வேண்டும் (யோவா 6 : 27, கொலோ 3 : 1 –2) தேவன் எல்லோரையும் நேசிக்கிறார். எல்லோரும் பரலோகம் செல்லமுடியும். ஆனால், அங்கே செல்வதற்கு எதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதை நாம் முடிவு செய்யவேண்டும். இங்கே இருக்கும்பொழுது, தேவனுடைய ஜனங்களுக்கு மகத்தான, உயரிய, உன்னத நோக்கமுண்டு.

## II. பரிசுத்தமான ஜனங்கள்

பரிசுத்தமான வாழ்வு வாழும்படியான மாபெரும் பொறுப்பு தேவனுடைய ஜனங்களுக்கு உண்டு "உன்னை சுத்தவானாக காத்துக் கொள்" என்று தீமோத்தேயுக்கு பவுல் கூறியுள்ளார் (I தீமோ 5 : 22) இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்களென்று இயேசு சொல்லியுள்ளார்

(மத் 5 : 8) நாம் பரிசுத்தமாயிராவிட்டால், நாம் பரலோகத்திற்குச் சென்று, கர்த்தரோடிருக்கும் சிலாக்கியத்தைப் பெறமுடியாது என்று எபிரேயர் ஆசிரியர் கூறுகிறார் (எபி 12 : 14) மாம்சத்தின் கிரியைகளால் நிறைந்திருக்கிறவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாதென்று பவுல் கலாத்தியருக்குச் சொல்கிறார். (கலா 5 : 19 – 21) எந்தப் பாவமும் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாதென்று வெளிப்படுத்தல் சொல்கிறது. (வெளி 21 : 27) தேவனுக்குப் பயப்படாத யாவரும் புறம்பே தான் இருப்பார்கள். (வெளி 22 : 15). வேதாகமம் நமது சட்டமாகவும், இயேசு நமது மாதிரியாகவும் உள்ளார். ஆகவே, நாம் பரிசுத்தமான வாழ்வு வாழ்வோம்.

## III. ஜெபிக்கும் ஜனங்கள்

தேவனுடைய ஜனங்கள் ஜெபிப்பவர்களாக இருக்க வேண்டியது அவசியம். ஜெபத்தின் மூலம் தேவனை கனப்படுத்துகிறோம். (மத் 6 : 9 – 12) விண்ணப்பிக்கிறோம் (மத் 7 : 7 – 11) நன்றி சொல்கிறோம். (பிலி 4 : 16) மற்றும் பாவங்களை அறிக்கை செய்கிறோம். (I யோவா 1 : 9) (அப். 8 : 22, லூக் 18 : 13). நம்முடைய ஆவிக்குரிய வாழ்வுக்கு, இவைகளனைத்தும் முக்கியமில்லையா? இயேசுக் கிறிஸ்து ஜெபிக்கும்படி அதிகாலமே எழுந்திருந்தார். (மாற். 1 : 35) சில நேரங்களில் இராமுழுவதும் ஜெபித்தார் (லூக் 6 : 12) நாம் இடைவிடாமல் ஜெபிக்கும்படி போதிக்கப்பட்டிருக்கிறோம். (I தெச 5 : 17 கொலோ 4 : 2) நம்முடைய வாழ்க்கையில் நாம் ஜெபிப்பதற்கான தேவை அதிகமாக உள்ளது. ஆம், நாம் ஜெபிக்கும் மக்களாக இருக்க வேண்டும்.

## IV. வல்லமையுள்ள ஜனங்கள்

தம்முடைய பிள்ளைகள் வல்லமையுள்ள ஜனங்களாக இருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். நாம் பலமாக இருக்க வேண்டுவதற்கான வழியைக் கொடுத்திருக்கிறார். (II தீமோ 1 : 7) நாம் கிறிஸ்துவுக்குள் பலமாக இருக்க முடியும் (எபே 6 : 10, 11) நாம் நம்முடைய விசுவாசத்துடன் இச்சையடக்கத்தையும், தைரியத்தையும் சேர்க்க வேண்டும் (II பேது 1 : 5 – 7 இது, சகிப்புத் தன்மைக்கான பலத்தைக் கொடுக்கிறது. நமக்கு வரும் அனுகூலமற்ற சூழலை நாம் மேற்கொள்ள வேண்டும். கிறிஸ்தவ ஜீவியத்தில் வரும் துன்பங்களை மேற்கொள்ள வேண்டும். நாம் ஒரு போதும் சேர்ந்து போகக் கூடாது. பாவத்திற்குப் பதில் எப்பொழுதும் “வேண்டாம்” என்று இருக்க வேண்டும். ஆம், நாம் வல்லமையுள்ள ஜனமாக இருக்க வேண்டும்.

தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு சிறப்பாக, தனித்துவமான எதிர்காலம் உண்டு. பரலோகம், விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்களுக்கான ஓர் இடம். நம்முடைய பொறுப்புகளை நிறைவேற்றுவோம். தேவனுடைய ஜனங்களாக நாம் எப்படி நடந்து கொள்கிறோம்?

**Vance Hutton** **EZSR**

# "யோனா தீர்க்கனின் புத்தகம்"

| | | |
|---|---|---|
| பெயரின் பொருள் | : | புறா |
| காலம் | : | கி.மு. 780 |
| யாருக்கு | : | இஸ்ரவேலுக்கும், நினிவேக்கும், |
| விவாதப் பொருள் | : | தேவனுடைய மனிதன் தேவச் செய்தியை வெளிப்படுத்த வேண்டும் |
| இதன் சிறப்பு | : | அற்புதங்களின் புத்தகம் |
| புறக் குறிப்பு | : | I தேவனிடத்திலிருந்து ஓடுதல் 1 அதி<br>II தேவனிடத்திற்கு ஓடுதல் 2 அதி<br>III தேவனோடு ஓடுதல் 3 அதி<br>IV தேவனுக்கு முன்பாக ஓடுதல் 4 அதி |

## இது தரும் பாடங்கள்

1. தேவன் எல்லா தேசங்களையும் நேசிக்கிறார்.
2. யோனாவின் மனநிலையை ஜனங்கள் இன்றும் பெற்றுக் கொள்ள முடியும்.
3. தேவனிடத்திலிருந்து ஒருவன் தப்பவே முடியாது.
4. தேவன் கொடுக்கும் பொறுப்பிலிருந்து நாம் விலகி ஓட, சாத்தான் எப்பொழுதும் ஒரு கப்பலை ஆயத்தமாக வைத்திருப்பான்.
5. கீழ்ப்படியாமை கீழ்வரமடையவே செய்யும்.
6. விலகியோடுவதைக் காட்டிலும், கீழ்ப்படிவது சுலபமானது.
7. நாம் வெகுதூரம் சென்றாலும், நாம் எங்கேயிருக்கிறோமென்பது தேவனுக்குத் தெரியும்.
8. தேவனை விட்டு ஓடுவது புயலை நோக்கி ஓடுவதற்குச் சமம்.
9. யாராலும் முடியாதபோது தேவனால் காப்பாற்ற முடியும்.
10. கர்த்தருடைய மனிதன், தேவ வார்த்தையைப் பிரசங்கிப்பதோடு நிறுத்திவிட்டு, முடிவை தேவனிடம் விட்டு விடவேண்டும்.
11. செடிகளையும், வீடுகளையும் காட்டிலும், ஆத்துமாவும் வாழ்வும் முக்கியமானது.

# மனம் திரும்புதல்

இன்று சிலர் எந்தவிதமான மனமாறுதலும் தன் வாழ்க்கையில் இல்லாது தானும் மனம் திரும்பி விட்டேன் என்று சொல்லுகிறார்கள். ஒரு விதமான உணர்ச்சியைக் கொண்டு அவ்வாறு சொல்லுகிறார்கள். மனம் திரும்புதல் என்றால் என்ன என்று அறியாத அநேக மக்கள் இன்றும் இருக்கிறார்கள். தன் இருதயத்தில் நான் மனம் திரும்பிவிட்டேன் என்று நினைத்தால் அதுவே மனந்திரும்புதல் என்று நினைக்கிறவர்களும் இருக்கிறார்கள். இது உத்தம மனந்திரும்புதல் அல்ல.

மாறாக, பாவமான ஜீவியத்தை விட்டு விட்டு பாவமில்லாத ஜீவியத்திற்கு முழுமையாக திரும்புவது. இதுவரை தான் நடந்துவந்த துன்மார்க்கமான ஜீவியத்தை உணர்ந்து தன்னை மாற்றி சன்மார்க்கமான ஜீவியத்திற்கு திரும்புவது. வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட வேண்டும். பழைய வாழ்க்கையை உதறித் தள்ளி விட்டு புத்தம் புதிய வாழ்க்கைக்கு வர வேண்டும். நாம் சென்ற பழைய பாதையை விட்டு விலகி புதிய பாதைக்குச் செல்ல வேண்டும். மனம் புதிதாக வேண்டும். பழைய பாவத்தை குழி தோண்டி புதைக்க வேண்டும். இல்லையேல் பழையபடி பழைய மனதே நிலைத்து விடும். வாழ்வில் எந்த மனமாற்றமும் இல்லை. வெறும் நினைப்பும் உணர்ச்சியுமே உண்டு. பேச்சு, சிந்தனை செயல் நடைமுறையாவும் புதிதாக இருக்க வேண்டும். அதுவே மனமாற்றம், பழைய மந்த புத்திபோய் புதிய சிந்திக்கும் சக்தி வாய்ந்த புத்தி வர வேண்டும். பழையவைகள் யாவும் ஒழிந்தன எல்லாம் புதிதாயின என்ற வேத வாக்கியத்திற்கேற்ப வாழ வேண்டும். முரட்டு குணம் போய், புதிதான சாந்தமான குணம் நம்மை ஆட்சி புரிய வேண்டும்.

பாவம் நம்மை அடிமையாக்கி ஆட்சி புரியக்கூடாது. பரிசுத்தத் தன்மை பெற்று பரிசுத்தம் நம்மை ஆட்சி புரிய வேண்டும். அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்குக் கிறிஸ்து நம்மை அழைக்க வந்தார். மனம் மாறி பரிசுத்தவான்களாக வேண்டும். பரிசுத்தவான்கள் என்ற முத்திரையையும் நாம் தேவனிடத்திலிருந்து பெற வேண்டும். குடும்பத்தில் ஓயாது சண்டையும், சச்சரவும் உள்ள வாழ்க்கை மாறி சாந்தமும் சமாதானமும், சந்தோஷமுமான வாழ்க்கைக்கு அர்ப்பணிக்க வேண்டும். குடும்பத்தில் சமாதானம் எப்பொழுதும் நிலை பெற வேண்டும். பொய், பித்தலாட்டம் போன்ற தீமை செய்யும் குணம் மாறி சத்தியத்தைப் பேச வேண்டும். நன்மையைச் செய்ய வேண்டும். தீமை செய்வது பிசாசின் குணம், நன்மை செய்வது கிறிஸ்துவின் குணம். கிறிஸ்து நன்மை செய்பவராக சுற்றித் திரிந்தார் என்று வேதம் கூறுகிறது நாமும் அந்த நல்ல குணத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும். மனம் திரும்பி பாவம் மன்னிக்கப்பட்ட ஜீவியமே கிறிஸ்துவ ஜீவியம். கிறிஸ்துவ ஜீவியம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் இட்டுச் செல்லும். சதாகாலமும் அவருடன் குடியிருக்கும் சிலாக்கியத்தை பெறுவோம். நித்திய ஜீவனை அடைவோம்.

ஞானம் மலேசியா

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Bar.ıgalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/WO/ PP/5
Posted at Erode HPO on 20, June 98
June 98, THIRUMARAIAASAAN Regd. No. TN/ERD/49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27, காங்கயம்-638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor S. Rajanayagam

PRINTED MATTER BOOK-POST

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27
KANGAYAM - 638 701.
Ph : 04257 - 20030